பொல்கஹவல பிரதேச சபை - 2024

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பொல்கஹவல பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பொல்கஹவல பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பெறுமதி ரூபா 932,350 ஆன CAT கணனி மென்பொருள் சபையினால் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் அது நடைமுறையல்லாச் சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டின் போது கணக்கீடு செய்யப்படும்.	சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	2024 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட ரூபா 1,198,293 ஆன 02 கட்டிடங்களின் பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த தவறை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும்.
(இ)	மீளாய்வண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊழியர் பிணை மற்றும் ஊழியர் கடன்கள் முறையே ரூபா 16,939 மற்றும் ரூபா 208,000 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	இந்தக் கடன் மீதியைத் தீர்த்து வைப்பதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும்.

1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலையான வைப்பு மீதி நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மற்றும் பட்டோலையின் பிரகாரம் ரூபா 320,133 வேறுபாடு காணப்பட்டது.	பட்டோலைகள் மற்றும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளில் காணப்படுகின்ற வேறுபாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பட்டோலைகள் மற்றும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளுக்கு இடையே வேறுபாடுகளுக்கான காரணங்களை இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிமை மாற்றங்கள் கூற்றின் பிரகாரம் ஆதனங்கள் அகற்றியதன் பெறுமதிக்கும், ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் குறிப்பின் பிரகாரம் ஆதனங்களை அகற்றுதலின் பெறுமதிகளுக்கும் இடையே ரூபா 608,257 வேறுபாடு காணப்பட்டது.	தவறு ஒன்றினால் குறைத்துக் குறிப்பிடப்பட்ட இந்த தவறை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

1.6.3 கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
காலப் பகுப்பாய்வு அறிக்கை மற்றும் பட்டோலை சமர்ப்பிக்காமையின் காரணமாக கூட்டுமொத்தமாக ரூபா 126,759,875 ஆன 13 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுதிப்படுத்த முடியாதிருந்தது.	சகல கணக்கு விடயங்களுக்காகவும் தகவல்களை உறுதிப்படுத்துகின்ற மீதி எதிர்வரும் ஆண்டுகளின் கணக்குகளுடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற தகவல்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

1.7 இணங்காமைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமானக் கோவை நிதிப்பிரமாணம் 571(2)	பெறுமதி ரூபா 8,339,406 ஆன 02 வருடங்களை விஞ்சிய நானாவித வைப்புக்கள் மற்றும் நிறுத்தி வைத்தல் பணம் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	வருமானத்திற்கு எடுக்கக் கூடிய மீதிகளை இனங்கண்டு வருமானத்திற்கு எடுப்பதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.8 அதிகாரபலம் இன்றிய கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபைக்குரிய வீதி ஒன்று ஏனைய நிறுவனத்தால் அபிவிருத்தி செய்யும் போது செயற்திட்டம் ஆரம்பிப்பதற்கு முன் பிரதேச சபையின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டியிருந்த போதிலும் ரணவிரு மாவத்தை முன்பள்ளி பாடசாலை அருகில் இருந்து கெங்கிரீட் சிறுகல் பிடித்து வீதி அமைக்கும் போது பிரதேச சபை மற்றும் பிரதேச செயலகம் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திட்டிருக்க வில்லை.	மிகுதி செயற்திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது புரிந்துணர்வு உடன்படிக்கையுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.	செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன் உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 15,638,074 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 56,265,899 ஆகும்.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

		2024				2023			
	வருமானமான மூலம்	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
		ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000
i.	ஆதன வரியும் வரியும்	13,275	17,012	19,146	13,977	13,071	13,571	9,479	16,111
ii.	வாடகை	17,033	18,015	19,001	4,448	19,853	15,530	14,809	5,327
iii.	அனுமதிப்பத்திரக் கட்டணம்	2,200	1,870	1,870	-	2,201	1,452	383	-
iv.	ஏனைய வருமானம்	85,530	106,034	106,034	-	98,240	103,518	2,615	-
	மொத்தம்	118,038	142,931	146,051	18,425	133,365	134,071	27,286	21,438

மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் முறையே ரூபா 142,931,000 மற்றும் ரூபா 134,071,000 ஆன சிட்டையிடப்பட்ட வருமானத்தை விட முறையே ரூபா 24,893,000 மற்றும் ரூபா 706,000 வருமானம் குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வருமானம் சரியாக மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ) மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட ரூபா 142.9 மில்லியன் ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கு உரிய நிலுவை வருமானத்தை உள்ளடக்கி ரூபா 146 மில்லியன் மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்டிருந்தது. கடந்த ஆண்டின் நிலுவை வருமானத்துடன் மீளாய்வாண்டின் இறுதியின் போது ரூபா 18.4 மில்லியன் மேலும் அறவிட வேண்டியிருந்தது.	நிலுவை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவை வருமானம் மற்றும் சிட்டையிடப்பட்ட வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ) வீதவரியும் வரியும் மீளாய்வாண்டின் இறுதியில் ஆதனவரி நிலுவை மீதி ரூபா 14,221,664 ஆக இருந்ததுடன் அதில் 05 வருடங்களை விஞ்சிய மீதி ரூபா 1,738,609 ஆகும். இந்த நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நிலுவைப் பணத்தை மிகவும் விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	விரைவாக நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ) ஏனைய வருமானம் மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும், ஏனைய அதிகாரத் தரப்பினரிடம் இருந்தும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 2,583,750 மற்றும் ரூபா 23,190,081 பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை.	நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பெற வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய 11 கணக்குகளில் ரூபா 47,909,398 மீதியில் 05 வருட காலத்தை விஞ்சிய மீதி ரூபா 8,695,059 காணப்பட்டது.	நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது.	பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய 04 கணக்குகளில் ரூபா 57,335,768 மீதியில் 05 வருடங்களை விஞ்சிய ரூபா 36,792,522 மீதி ஒன்று காணப்பட்டது.	செலுத்த வேண்டிய கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	செலுத்த வேண்டிய பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	அறவிடக் கூடிய VAT வரி ரூபா 2,217,809 மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	தனியார் நிறுவனம் ஒன்றுக்கு சொந்தமாகக் காணப்பட்ட ரூபா 7.5 மில்லியன் கிரயத்துடனான நீர் செயற்திட்டம் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் மூலம் நகரத்தின் அரசாங்க நிறுவனங்கள் இரண்டிற்கு மாத்திரம் நீர் வழங்கி வருமானம்	மக்களின் நீர்த் தேவைக்காக உள்ள கோரிக்கை மற்றும் நீர் மூலத்தின் இயலளவைக் கவனத்தில் கொண்டு எதிர்காலத்தின் நீரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மக்களின் நீர்த் தேவையினை நிறைவேற்றி சபைக்கு வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.		
(ஆ)	வருடாந்த சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் பெற வேண்டிய 24 கைத்தொழில்களுக்கு உரிய அனுமதிப் பத்திரத்தை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	அனுமதிப் பத்திரத்தைப் புதுப்பிப்பதற்காக தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	சுற்றாடல் மாசுபடுதலைக் குறைப்பதற்கு சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	சபையினால் 2020 ஆம் ஆண்டில் பல்நோக்கு கட்டிடம் ஒன்று நிர்மானிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு முதலாவது கட்டம் 2022 ஆகஸ்ட் 12 ஆம் திகதி முடிவடைந்து சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக ரூபா 3,640,000 வருமானம் சபைக்கு இழக்கப்பட்டிருந்தது.	பல்நோக்கு கட்டிடத்தில் மின்சார இணைப்பு வழங்கப்படாது இருந்தமையால் அந்த கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு முடியாதிருந்தது.	சபையின் சொத்துக்களின் மூலம் ஆகக் கூடிய வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	சபை வீதி ஒன்று கொங்கிரீட் சிறு கல் பதிக்கும் செயற்திட்டத்திற்காக கடனடிப்படையில் 2021 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்த ரூபா 306,250 ஆன 8,350 கொங்கிரீட் சிறுகற்களில் பணமாக மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 240,439 அறவிட வேண்டியிருந்தது.	அறவிட வேண்டிய கடன் தொகையை விரைவாக அறவிடப்படும்.	சபைக்கு ஏற்பட்ட நட்டத்தை கவனத்தில் கொண்டு எதிர்காலத்தில் மிகைக் கட்டணத்தை விதிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபைக்குரிய டிப்பர் வண்டி மற்றும் கம்பெக்டர் வண்டி 2023 ஆம் ஆண்டு முதல் விளைவற்றுக் காணப்பட்டது.	எதிர்வரும் தினங்களில் சபை வேலைகளுக்காக ஈடுபடுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.	சபையின் சொத்துக்களை உச்ச அளவில் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்துதல் வேண்டும்.
(ஆ)	கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்திற்காக 2020 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ஹலர் இயந்திரம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	இந்த இயந்திரத்தை பயன் படுத்தப்படுகின்ற போதும் ஏனைய இயந்திரங்கள் முறையற்றதாக பொருத்தியமை மற்றும் மின்சாரம் பெற்றுக் கொள்ள முடியாமையினால் பசளை கூறுகளாக்க பயன்படுத்த முடியாது இருந்தது.	சபையின் சொத்துகளில் இருந்து ஆகக் கூடிய வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(இ)	கொங்கிரீட் சிறுகல் உற்பத்தி செயற்திட்டத்திற்காக பயன்படுத்திய பெறுமதி ரூபா 1,397,152 ஆன கற்கள் உற்பத்தி செய்யும் 04 இயந்திரங்கள் மற்றும் பெறுமதி இனங்காணப்படாத 04 தாங்கிகள், கட்டிடம் மற்றும் அந்தக் காணி என்பன 05 வருடம் அளவிலான காலத்தில் இருந்து விளைவற்றுக் காணப்பட்டது.	கொங்கிரீட் கல் உற்பத்தி இயந்திரம் 04 இனதும் 04 மோட்டர்கள் இனதும் பாதுகாப்பதற்காக பிரதான களஞ்சியத்திற்கு தற்போது கையளிக்கப்பட்டுள்ளது.	சபையின் சொத்துக்களை உச்ச அளவில் செயற்திறனாக பயன்படுத்துதல் வேண்டும்.

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபை உரிமை கோருகின்ற பெறுமதி ரூபா 6,210,825 ஆன 24 காணிகளின் உரித்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	இந்த காணிகளை இனங்கண்டு சட்டரீதியான உரித்துறுதியின் மூலம் கையேற்பதற்கான மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.	சபை பயன்படுத்துகின்ற காணிகளை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.5 ஒப்பந்த நிர்வாகம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபை வீதி ஒன்றை திருத்தி அமைக்கும் செயற்திட்டத்தின் ரூபா 35,100 ஆன 04 வேலை விடயங்கள் நிறைவேற்றப்படாது இருந்ததுடன் வேலை விடய இலக்கம் 09 இன் கீழ் Gravel Spreading, Watering & Rolled including hire charge இற்காக ரூபா 138,950 செலுத்தப்பட்டிருந்த போதிலும் இந்த வீதிக்காக கல் உருளை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	வீதி திருத்தி அமைக்கும் செயற்திட்டத்தை நிறைவேற்றும் போது காணப்பட்ட அதிக மழையுடனான நிலமையினால் வீதியில் ஒரு பகுதி கீழிறங்கி இருந்தது. அந்தப் பகுதியும் அத்தியாவசியமாக தயாரிக்க வேண்டி இருந்தமையால் இதன் விடய இலக்கம் 11, 12, 13, 14 இன் கீழ் காணப்பட்ட வேலைப் பகுதி நிறைவேற்றப்படாமல் அந்த நிதி அணையின் ஒரு பகுதியை தயாரிப்பதற்காக ஈடுபடுத்தப்பட்டிந்தது.	வேலை மதிப்பீடு திருத்தப்படும் போது அதற்கு முன் அங்கீகாரம் பெற வேண்டி இருந்துடன் மேலதிக கொடுப்பனவுகள் அறவிடப்படல் வேண்டும்.

3.6 மனிதவள முகாமைத்துவம்

(அ) ஊழியர் வெற்றிடம் மற்றும் மிகை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(i)	சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்பட்ட 04 வருமானப் பரிசோதகர்கள் நீண்டகாலமாக வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அவர்களுக்குரிய கடமைகள் அலுவலக உதவியாளர் மற்றும் கள ஊழியர்களினால் நிறைவேற்றப்பட்டிருந்தது.	வெற்றிடங்களை நிரப்புவதற்கு முன்னுரிமை வழங்குமாறு கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	வெற்றிடமான பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்து சபையின் நடவடிக்கைகளை முறையாக பேணிச் செல்லல் வேண்டும்.
(ii)	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் இன்றி 11 பதவிகளுக்காக 15 ஊழியர்கள் சேர்க்கப்பட்டதுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினை 52 ஊழியர்கள் விஞ்சி ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.	அங்கீகாரத்திற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தின் பிரகாரம் ஆட்சேர்த்தல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(iii)	சேர்க்கப்பட்ட பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றாமல் ஏனைய பதவிகளின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு 20 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.	வெற்றிடங்களை நிரப்பாமையின் அடிப்படையில் கடமைகளை மேவுகை செய்வதற்கு புதிய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.	வெற்றிட பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(i)	மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பௌதீகத் திட்டம், வீதிகள், காணிகள் மற்றும் கட்டிட பிரிவில் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்ட 49 செயற்திட்டங்களில் ரூபா 18,000,000 நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த 45 செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.	பொதுமக்களின் கோரிக்கை மற்றும் அலுவலக அவசர தேவையின் காரணமாக செயல் நடவடிக்கைத் திட்டத்தின் முன்மொழிவுக்கு பதிலாக ஏனைய செயற்திட்டங்களை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டிருந்தது.	தேவையினை இனங்கண்டு நிறைவேற்றக் கூடிய செயற்திட்டங்கள் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்குதல் வேண்டும்.
(ii)	மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத ரூபா 5,055,764 ஆன 07 செயற்திட்டங்கள் வருடாந்த பாதீட்டின் மூலம் நிதியேற்பாடு ஒதுக்காமல் நிறைேவேற்றப்பட்டிருந்தது.	பொதுமக்களின் கோரிக்கை மற்றும் அலுவலக அவசர தேவையின் காரணமாக செயல் நடவடிக்கைத் திட்டத்தின் முன்மொழிவுக்கு பதிலாக ஏனைய செயற்திட்டங்களை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டிருந்தது.	வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.2 சுற்றாடல் பிரச்சனைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மழைக் காலத்தின் போது பிலிசறு கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தின் கழிவுப் பொருள் விழிந்தோடுகின்ற நீருடன் கலப்பதனால் அவை வடிகாண் முறைமை ஊடாக அகற்றப்பட்டு வீதி இரு பக்கமும் உள்ள வடிகாண் ஊடாக மா ஓயாவிற்கு வழிந்து செல்கின்றமை அவதானிக்கப்பட்டது.	நிலத்தில் கழிவுப் பொருள் மலையும் அதில் ஒரு பகுதிக்கு குவிக்கப்பட்டு பொருத்தமான நிலம் ஒன்றில் அகற்றுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும்.	கழிவுப் பொருள் முகாமைத்துவத்தை முறைமைப்படுத்தி மக்களுக்கு சுகாதாரமான சூழல் ஒன்றை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	பிலிசறு கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்திற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை.	செயற்திட்டத்திற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றாடல் சட்ட விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.3 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் தொடர்பான 2030 இன் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபையினால் அறிந்து சபை அதிகாரப் பிரதேசத்தில் மக்களின் பல்வேறு தேவைகளுக்காக ரூபா 14,700,000 செலவில் 17 நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.	ருத்து தெரிவிக்கப்பட ில்லை.	நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.